www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 3rd Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம்<br>Hindu Culture | Three Hours 10 min<br>Gr -12 (2022) | 46 | T | I,II |

## பகுதி I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. வேதங்கள் "அபௌருஷேயம்" எனச் சுட்டப்படுவதற்கான காரணம்
   1) அநாதி என்பதால்
   2) மனிதரால் இயற்றப்படாதது என்பதால்
   3) காதால் கேட்கப்பட்டது என்பதால்
   4) புலனுணர்வால் அறியப்பட்டது என்பதால்
   5) ரிஷிகளால் இயற்றப்பட்டது என்பதால்

02. இதிகாச புராணங்களின் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கு வகித்த மூல நூல்
   1) வேதங்கள் 2) உபநிடதங்கள் 3) சுக்கிர நீதி 4) ஆரணியகம் 5) ஆகமங்கள்

03. ஆகமம் கூறும் கிரியைகளை ஒழுங்காக நிறைவேற்ற வழிகாட்டும் நூல்கள்.
   1) திருமுறைகள் 2) தந்திரங்கள் 3) பத்ததிகள்
   4) பிரம சூத்திரம் 5) தோத்திர மாலை

04. "இராஜசிம்ம பல்லவேஸ்வரம்" என அழைக்கப்பட்ட கோயில்
   1) பனைமலைக் கோயில்
   2) திருச்சிகுடைவரைக் கோயில்
   3) தர்மராஜரதக் கோயில்
   4) காஞ்சி கைலாசநாதர் கோயில்
   5) மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்

05. அனந்த சயன வடிவம் எதனைக் குறித்து நிற்கிறது
   1) ஆழ்வார்களது வழிபாட்டு நிலையாகும்.
   2) சிவனும் விஷ்ணுவும் இணைந்த நிலையாகும்.
   3) விஷ்ணுவின் ஆடல் நிலையாகும்.
   4) ஐயப்பனது அருள்பாலிக்கும் நிலையாகும்.
   5) இறைவன் முக்காலத்தையும் உணர்ந்தவனாய் துயிலும் நிலையாகும்.

06. சிந்துவெளி பிரதேசம் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலம்
   1) 1850 – 1900 2) 19000 – 1920 3) 1910 – 1925
   4) 1922 – 1930 5) 1930 – 1950

07. "சிற்பக்கலைக் களஞ்சியம்" என்று போற்றப்படும் ரதக்கோயில்
   1) தருமராஜ ரதம் 2) வீமரதம் 3) நகுல ரதம்
   4) கொற்றவை ரதம் 5) அர்ச்சுணன் ரதம்

08. "பத்து மலைக்கோயில்" அமைந்த இடம்
   1) கம்போடியா 2) மலேசியா 3) சம்பா 4) தாய்லாந்து 5) ஜாவா

09. கல் நந்தி புல் உண்ட சிறப்புக்குரிய திருத்தலம்
   1) முன்னேஸ்வரம் 2) திருக்கேதீஸ்வரம் 3) திருக்கோணேஸ்வரம்
   4) நகுலேஸ்வரம் 5) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

10. "பிரபோத சைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமத்தைக் கொண்டவர்
 1) சுவாமி விபுலானந்தர் 2) சுவாமி விவேகானந்தர் 3) ஆறுமுக நாவலர்
 4) கா.அருணாசலதேசிகர் 5) காசிவாசி செந்திநாதையர்

11. நடராஜரை "ஆடவல்லான்" எனப் போற்றியவர்கள்
 1) பல்லவ மன்னர்கள் 2) பாண்டிய மன்னர்கள் 3) சோழ மன்னர்கள்
 4) சாளுக்கிய மன்னர்கள் 5) நாயக்க மன்னர்கள்

12. பிரம்ம சமாஜம் தாபிக்கப்பட்ட ஆண்டு
 1) 1875 2) 1829 3) 1888 4) 1828 5) 1923

13. "ராஜராஜன் சதுர்வேதி மங்கலம்" எங்கு அமைந்துள்ளது
 1) அநுராதபுரம் 2) பொலன்னறுவை 3) கந்தளாய்
 4) மாதோட்டம் 5) குருநாகல்

14. விக்கிரக் கலையில் "சிலா பரீட்ஷணம்" என்பதனாற் கருதப்படுவது
 1) மரத்தை தேர்தெடுத்தல் 2) உலோகத்தை தேர்தெடுத்தல்
 3) சுபவேளையைத் தேர்தெடுத்தல் 4) சுதை பொருளைத் தேர்தெடுத்தல்
 5) கல்லைத் தேர்தெடுத்தல்

15. தென்னிந்திய வரலாற்றில் கோபுரங்கள் மிகுதியாக அமைக்கப்பட்ட காலம்
 1) சங்க காலம் 2) சங்கமருவிய காலம் 3) பல்லவர் காலம்
 4) சோழர் காலம் 5) விஜய நகர நாயக்கர் காலம்

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>ஆறுமுகநாவலர் | **F**<br>சிலாபரீட்சணம் | **K**<br>சேயோன் | **P**<br>சாத்திரங்கள் |
| **B**<br>நடுகல் | **G**<br>சைவதூஷண பரிகாரம் | **L**<br>உலோகச் சிற்பங்கள் | **Q**<br>நடராச சின்னம் |
| **C**<br>சதுர்வேதிமங்கலம் | **H**<br>தேவரடியார் | **M**<br>உற்சவம் | **R**<br>கஞ்சித்தொட்டி தருமம் |
| **D**<br>நந்திக்கொடி | **I**<br>நாயன்மார் படிமங்கள் | **N**<br>வேத விருத்தி | **S**<br>மாயோன் |
| **E**<br>கர்ஷணம் | **J**<br>வெறியாட்டு | **O**<br>சைவவினாவிடை | **T**<br>இராஜராஜேஸ்வரம் |

16. ஐந்தாம் குரவரோடு தொடர்புடைய தொகுதி
 1) A, G, O, R 2) B, G, M, S 3) C, I, N, S 4) D, J, O, T 5) E, F, K, Q

17. சங்ககால சமய நிலையோடு தொடர்புடைய தொகுதி
 1) A, H, N, S 2) C, J, O, T 3) B, J, K, S 4) D, G, L, R 5) FE, I, O, T

18. பொலன்னறுவைக்கால இந்துசமய வரலாற்றோடு தொடர்புடைய தொகுதி
 1) A, F, N, S 2) C, I, L, T 3) B, J, O, T 4) E, F, L, P 5) D, H, M, S

19. சோழர் கால சமய நிலையோடு தொடர்புடைய தொகுதி

1) B, G, L, Q    2) A, J, K, R    3) C, J, O, S    4) E, H, O, R    5) D, H, N, Q

20. ஆகமங்களோடு தொடர்புடைய தொகுதி

1) D, H, M, R    2) A, I, K, O    3) B, H, N, Q    4) E, F, M, P    5) C, I, O, T

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21. சிந்துவெளிக்காலம்

1) சிந்து வெளியில் 1922 தொடக்கம் 1930 வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
2) மொகஞ்சதாரோ பாகிஸ்தானில் உள்ளது.
3) சேர். ஜோன் மார்ஷலின் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
4) ஹரப்பா மேற்குப்பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது.
5) கி.மு 3250 – கி.மு 5000 வரையான காலப்பகுதி.

22. சுவாமி விவேகானந்தர்

1) பசியுள்ளவனுக்கு சமயப் போதனை ஆகாது எனக் கூறியவர்.
2) சிக்காக்கோ மாநாடுக்கு சென்றவர்.
3) "சூறாவளித் துறவி" என போற்றப்படுபவர்.
4) இராமகிருஷ்ண மடத்தினை தாபித்தவர்.
5) இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீர்திருத்தவாதி.

23. பிரம சமாஜம்

1) 1828 இல் பிரம சமாஜம் தாபிக்கப்பட்டது.
2) விக்கிரக ஆராதனை என்ற நூலில் உருவ வழிபாட்டின் சிறப்புக்களை கூறியமை.
3) பால்ய விவாகத்தடை செய்தமை.
4) 1815 இல் ஆத்மீக சபை தாபித்தமை.
5) 1804 இல் உருவ வழிபாட்டை எதிர்த்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டமை.

24. பல்லவர் காலக் கட்டடக் கலை

1) குடைவரைக் கோயில்களை அமைத்தவன் மகேந்திரவர்வன்.
2) ரதக்கோயில்களை செதுக்குத்தளிகள் எனவும் அழைக்கப்படும்.
3) நந்திவர்மன் கட்டுத்தளிகளை அமைத்தான்.
4) காஞ்சி கைலாசநாதர் கோயிலை பெரிய கற்றளி எனவும் அழைப்பர்.
5) மலைதளிகளை இராஜசிம்மன் அமைத்தான்.

25. இதிகாசங்கள்

1) மகாபாரதத்தை ஐந்தாம் வேதம் என்பர்.
2) இதிகாசங்கள் இந்துசமய கலைக்களஞ்சியமாகும்.
3) குப்தர் காலத்தில் இறுதி வடிவம் பெற்றன.
4) மகாபாரதம் மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெறவில்லை.
5) சிவரகசியம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவில்லை.

(25x4=100 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் இருபது புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

01. **இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.**
    அ) புராணங்களின் ஐவகை இலட்சணங்கள்
    ஆ) புராணங்களின் வகைகள்
    இ) புராணங்கள் சித்தரிக்கும் வழிபாட்டு முறைகள்
    ஈ) தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

02. **பல்லவர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த மேல்வரும் விடயங்களை விளக்குக.**
    அ) மன்னர்களது பங்கும் பணியும்
    ஆ) பக்தி இயக்கமும் அதன் செல்வாக்கும்
    இ) கலை வளர்ச்சியின் சிறப்புக்கள்
    ஈ) திருக்கோயில் வழிபாடு (5+5+5+5=20 புள்ளிகள்)

03. **இந்து சமயத்தை வளம் பெறச் செய்வதில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்புக்களை மேல்வரும் தலைப்புக்களில் விபரிக்குக.**
    அ) சுவாமி விபுலானந்தர் பற்றிய அறிமுகம்
    ஆ) சமயப் பணிகள்
    இ) கல்விப் பணிகள்
    ஈ) கலைப்பணிகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. **சோழர் காலத்தில் ஏற்பட்ட இந்துப்பண்பாட்டு வளர்ச்சியினை மேல்வரும் அடிப்படையில் விபரிக்குக.**
    அ) சோழப்பெருமன்னரின் பங்கும் பணியும்
    ஆ) கோயில்களும் கலைகளும்

(10+10=20 புள்ளிகள்)

05. இந்து சமூக சீர்திருத்த இயக்கமாகிய ஆரிய சமாசத்தின் பணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)

06. இந்து நுண்கலைகளுள் விக்கிரககலை பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறி விக்கிரகக் கலைகளில் ஒன்றான நடராஜ மூர்த்தம் பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

07. **இலங்கையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் பற்றி விளக்குக.**
    அ) சைவ பரிபாலன சபை
    ஆ) இராம கிருஷ்ண மிஷன்

(10+10=20 புள்ளிகள்)

08. இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட இந்துசமய வளர்ச்சியின் பிரதான அம்சங்களை பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!